**<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>**

**<u>அ.வ.எண்.118/2018</u>**

2025–ம் வருடம் நவம்பர் திங்கள் 10–ம் நாளன்று 105 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.28 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: கனகராஜ்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**<u>முதல் விசாரணை</u>:–**

நான் இவ்வழக்கில் 105 வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 105 வது பிரதிவாதி கனகராஜ் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.160 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 25.03.2009 ஆம் தேதிய 105 வது பிரதிவாதி பெயரிலான கிரைய ஆவணம் எண்.6292/2008 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.161 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(புகைப்பட நகலாக இருப்பதால் ஆட்சேபனை செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.)** கடந்த 08.11.2025 ஆம் தேதிய ரவிசந்திரன் பெயரிலான வில்லங்க சான்று ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.162 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(வில்லங்க சான்றிதழ் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)** கடந்த 08.11.2025 ஆம் தேதிய கனகராஜ் பெயரிலான வில்லங்க சான்று ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.163 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(வில்லங்க சான்றிதழ்**

**முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)** கடந்த 08.11.2025 ஆம் தேதிய விஜயலட்சுமி பெயரிலான கூட்டுப்பட்டா எண்.1336 ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.164 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1 முதல் 6, 8 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 50, 52 முதல் 58, 60, 62, 63, 64, 65, 67, 68, 69, 70 முதல் 75 முதல் 87, 89 முதல் 100, 102, 104 முதல் 105, 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். சென்னையிலிருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 300 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். தும்பிவாடி கிராமத்தில் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. 106 நபர்கள் கிரையம் பெற்றதற்காக நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.161 மூலம் நீங்கள் வாங்கிய கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8 ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்பதால் பி.வா.சா.ஆ.161-ன் கீழ் உங்களுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கு முன்பு வில்லங்கம் பார்த்ததாக சொல்லும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆமாம் அது என் வசம் உள்ளது அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் பி.வா.சா.ஆ.162-யை கிரையம் வாங்கும் போது பார்க்கவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக பார்த்ததாக பொய்யாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.162 நான் சொத்து வாங்கும்போது பார்த்த வில்லங்க சான்றிதழ் ஆகும். நீதிமன்றத்திற்கு இன்று சாட்சியம் அளிக்க யார்

உங்களை அழைத்து வந்தார்கள் என்றால் வழக்கறிஞர் சொல்லியதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். நீங்கள் வாங்கிய பி.வா.சா.ஆ.161 கிரையம் செல்லாததால் அதன் அடிப்படையில் வாங்கிய பி.வா.சா.ஆ.163 கூட்டுப்பட்டா செல்லாது என்று சொன்னால் சரியல்ல. ரவிச்சந்திரனுக்கு தாவா சொத்தை விற்க எந்தவொரு உரிமையோ அதிகாரமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.